**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.251/2021**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | Sabitha | Prosecution | P.W-4, L.W-6 |
| Husband Name | Bharathiraja | Defence | |
| Village | Mathakoil st, Aathukudi | Taluk | |
| Calling | | Religion | |
| Age | 41/2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **03.09.2024.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். அ.சா.1, 2 , 3 என் உறவினர்கள். ப.சா.4, 5, 7, 8 என் ஊர்க்காரர்கள். எனது ஓர்ப்படியார் கடந்த 2.6.2021 ம் தேதி காலை 9.00 மணி அளவில் எனது நாத்தனார் வீட்டு கொல்லைப்புறத்தை கூட்டி குப்பையை கொளுத்தி கொண்டிருந்தபோது ஊர் தலைவர் சிலம்பரசன் பரிமளாவை கம்பியால் அடித்தார். எனது மாமியார் வாசுகியும் நாத்தனார் தேன்மொழியும் ஏன் இவ்வாறு அடிக்கிறாய் என்று கேட்டதற்கு அவர்கள் இருவரையும் சிலம்பரசன் அடித்தார். சசிகலா, இலக்கியா, அபிதா ஆகிய மூவரும் இரும்பு முறத்தாலும் கையால் முடியை பிடித்து இழுத்தும் என்னையும் என் நாத்தனார் மாமியார், ஓர்ப்படியார் ஆகிய நால்வரையும் அடித்தனர். பரிமளாவை ராடால் அடித்ததால் மயங்கி கீழே விழுந்துவிட்டார். நாங்கள் சத்தம் போட்டவுடன் வீட்டில் இருந்த என் கணவர், கொழுந்தனார் வந்து பரிமளாவையும் மாமியார் நாத்தனாரையும் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக என் கொழுந்தனார் பாஸ்டின் அழைத்து சென்றார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் ஆஜராகி குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது–**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**Case No.CC.251/2021**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | Tamilvanan | Prosecution | P.W-5, L.W-8 |
| Father Name | Balaiyan | Defence | |
| Village | Mathakoil st, Aathukudi | Taluk | |
| Calling | | Religion | |
| Age | 31/2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **03.09.2024.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். அ.சா.1, 2 , 3, 4 என் குடும்ப உறவினர்கள். ப.சா.4, 5, 7, என் ஊர்க்காரர்கள். கடந்த 6.6.2021 ம் தேதி இரவு 7.00 மணிக்கு எங்கள் வீட்டிற்கு போலிசார் வந்து சம்பவ இடத்தை விசாரித்து படம் வரைந்து அதில் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னுடன் கலியபெருமாள் மகன் தர்மராஜ் கையெழுத்து செய்தார். அவர் என் ஊர்க்காரர். நீதிமன்றத்தில் என்னிடத்தில் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்துகளில் இரண்டாவது கையெழுத்து என்னுடையது. **அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் கையெழுத்து செய்த பேப்பரில் உள்ள விவரம் எனக்கு தெரியும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் ஆஜராகி குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது—**